# மாயூரம்
# விற்பன்னர் வேதநாயகர்
## இயற்றியருளிய

●

பெரியநாயகி அம்மன் பதிகம்
தேவமாதா வந்தாதி
தனிப்பாடல்கள் சில..
மாணிக்க மாலை

●

வெளியிடுபவர் :

**S. மிக்கேல்**

V. V. S. ஐயர் தெரு
கணபதிபுரம்
தாம்பரம் P. O. சென்னை - 600 059

# மாயூரம்
# விற்பன்னர் வேதநாயகர்
## இயற்றியருளிய

●

பெரியநாயகி அம்மன் பதிகம்
தேவமாதா வந்தாதி
தனிப்பாடல்கள் சில..
மாணிக்க மாலை

●

வெளியிடுபவர்
**S. மிக்கேல்**
V. V. S. ஐயர் தெரு
கணபதிபுரம்
தாம்பரம் P. O. சென்னை-600 059

# என்னுரை

நான் இளைஞனாக இருந்த காலத்தில் நெல்லை மாவட்ட வீரவநல்லூர்க் கார்மேல் உத்தரிய அன்னையின் திருவிழாவில் பங்கு பெற்றிருக்கிறேன். பத்து நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவின்போது ஒவ்வொரு நாளும் கோவிலில் மாலை ஆராதனைக்குப் பின் உபதேசியார் மரியன்னையைப் பற்றிய பாடலை மனமுருகப் பாடுவார். பக்தர்கள் அனைவரும் அதில் ஈடுபட்டிருப்பர். என் இலக்கியப் பற்றுக் காரணமாக அப்பாடல் என் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தது. ஒவ்வொரு பாடலும் "பேர்புகழும் வீரைமா நகர் தனின் தாயான பேரின்ப கார்மேல் அன்னையே" என நிறைவு பெறும். இதே பதிகப் பாடல்கள் "வேளாங்கண்ணியில் வாழும் அன்னையே" என நிறைவு பெறுவதையும் நான் கண்டும் கேட்டும் இருக்கின்றேன். சென்னையை அடுத்துள்ள பெரிய பாளையத்தின்கண் வாழும் பெரியநாயகி அன்னை மீது வேதநாயகர் பாடிய இப்பாடலை அந்தந்த ஊரினர் தத்தம் ஊருக்குச் சொந்தமாக ஆக்கிக் கொள்ளும் அளவிற்கு அது செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை நான் இப்போது உணர்கிறேன்.

வேதநாயகரின் இப்பதிகத்தால் உலக அன்னையாகிய மரியன்னையின் பெரும்புகழ் தமிழ் கூறும் நல்லுலகம் முழுமையும் நன்குகப் பரவவேண்டும் என்ற ஆர்வத்தால் இதனை வெளியிட முன்வந்துள்ளேன். இந்நூலுக்கு அணிந்துரை தந்துள்ள அருள் தந்தை மரியதாஸ் அடிகளாருக்கு என் நன்றி.

M. ஜோசப் அந்தோனி

# அணிந்துரை

பெரியநாயகியின் பதிகம், அன்னையின் அந்தாதி எனும் இரு சிறப்பு கவிதைகளை வெளியிட முனைந்த நண்பர் இவற்றிற்கு அணிந்துரை வரைய என்னை வினவியுள்ளார். கவிஞர் கோமகன் வேதநாயகரின் செய்யுள் படைப்பிற்கு அணிந்துரை கூற எனக்குத் தகுதியில்லை. நான் கவிஞன் அல்லேன்; கவித்திறனை கணிக்கும் பாண்டித்தியம் பெற்றவனுமல்லேன். வேதநாயகரின் கவிதைகளில் காணும் கருத்துயர்வைக் கண்டு மகிழும் தொண்டன். அருள் மரித்தாயிடம் அவருக்குள்ள சேயன்பை நினைந்து நெஞ்சம் நெகிழும் — மரியன்னைதாசன் எனும் ஒரே காரணத்தால் இப்பணியை நிறைவேற்றத் துணிகிறேன்.

செய்யுள், இசை, உரைநடை முத்துறையிலும் வித்தகரான வேதநாயகர் இவற்றுள் எத்துறையில் உச்சம் கண்டார் என்று கணிப்பது இயலாது. இவரின் கவிதைகளில் துலங்கும் கவித்திறனும் கலைத்திறனும் கருத்துயர்வும் ஒன்றையொன்று ஈடு செய்து நிற்கின்றன. எனினும் இம்முத்துறைக்கும் சத்துவமளிக்கும் சக்தியொன்றை அன்னவர் எழுத்தோவியங்களில் காணலாம். அது உயிரோட்டமளிக்கும் உயரிய சத்துவம்; சிறப்பின் சிகரத்திற்கேற்றும் திருமறை சத்துவம்; உள்ளத்தே குடிகொள்ளும் ஆண்டவனை ஒரு பொழுதும் மறவாது ஒன்றுயிணைந்துய்யும் அருள் வாழ்வின் சத்துவம் தான் அது. "ஆண்டவனே, நான் என்றும் உன் திருவடி நிழலிலேயே இருக்க வேண்டும். இதுவே நான் கோரும் வரம்" என்று கனிந்து பாடியுள்ளாரல்லவா? "வேண்டித் தொழுத வண்ணம் இருந்தருள வேண்டு"மென்று இயம்புகின்றார் வேதநாயகர். "இனி வாழ்பவன் நானல்ல; என்னில் வாழ்பவர் கிறீஸ்துவே" (கலா : 2:20) எனும் புனித சின்னப் ரின் அருள் வாக்கைத்

தன்னில் மெய்ப்பித்துள்ளார் வேதநாயகர் என்ருல் மிகை யாகுமோ? வேதநாயகரின் காவியங்களிலும், இசையிலும், உரைநடையிலும், உயிரூட்டும் இச்சத்துவம் தோன்றி நிற்பது கண்கூடு.

அருள் சுரக்கும் ஆண்டவனுக்கு அன்பு செய்து இவ்வன்பே தன்னுள் செயலாற்றும் சத்துவமாக வாழ்ந்த வேதநாயகர், ஆண்டவனின் மாபுனித அன்னை அமல நாயகியை எத்துணை கனிவோடு ஏற்றிப் போற்றியுள்ளார் என்பதை அவர் பாடியுள்ள மரியன்னை பதிகமும் அன்னையின் அந்தாதியும் அற்புதமாக நிருபிக்கின்றன.

நீதிபதியாகப் பணியாற்றிய வேதநாயகர், தம் தொழில் சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்திற்கு சென்றிருந்த போது, இச்சென்னபட்டினத்திற்கு அருகில் சுமார் 12 கல் தொலைவிலுள்ள பெரியபாளையம் கிராமத்தின் கத்தோலிக்கர் வேதநாயகரை தங்கள் ஊருக்கு அழைத்துச் சென்று அங்கு கோவில் கொண்டிருந்த பெரியநாயகி அன்னை மேல் கவிபாடக் கோரினர். வித்தகர் வேதநாயகரும் மாதாவின் மேல் அருள் சுரக்கும் அமுதக் கவியாக நெஞ்சம் நெகிழ நினைந்துருகி இன்பப் பதிகம் பாடினர்; இப்பதிகம் பக்தர் கோடிகளுக்கு இணையற்ற சொத்தாக நிலைத்துள்ளது.

வேத்நாயகர் தேவ அன்னைமேல், எத்தகைய உள்ளன்பு கொண்டிருந்தார் என்பதைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது இப்பதிகம். ‘‘பெரியபாளையம் வாழும் அரிய நாயகியான பெரியநாயகி அன்னையே’’ என்று கூவியழைக்கும் போது எத்துணை உயிரோட்டம் தொனிக்கிறது. அபலக்குரல் எழுப்பும் சபலையைப்போல் ‘‘என்னை வந்தாண்டு கொள்வ தொரு பாரமோ? இங்குவர வெகுதூரமோ?’’என்ற முறைப்பாடு அவர் மனதிலுள்ள தெளிந்த உறுதியான நம்பிக்கையை விளக்கிக் காட்டுகின்றதன்ரோ? அன்புப் பிணைப்பில் ஒன்ருன உளத்தினராய் தாயும் சேயும் தமக்குள்ளே வாதாடும் தனித்

தன்மை துலங்க; "நாசமறு மெம்பிரான் நின்பிள்ளையாயினும் நானுமுன் பிள்ளையன்றோ" என்று இழைந்து குழைந்து கூறும் உரிமைக் குரலோடு; "நாடியென் வழக்கையொரு நியாய சபையிற் பேசி நான் வெற்றி பெறுவதரிதோ" என்று நிமிர்ந்து உரைக்கும் நம்பிக்கைத் தொனி எத்துணை உயர்வானது; திடமான நெஞ்சத்துள் பொங்கி வழியும் தளராத அன்புப் பெருக்கன்றோ அது? இந்த உறுதியான நம்பிக்கை பிறக்குமிடமும் நிலைக்குமிடமும் வேறு எங்கும் இல்லை, நமக்குள்ளே தான் இருக்கிறது; "ஈசனும் உனது திருமைந்தன் என் வழக்கினுக்கு இசைவான சாட்சியன்றோ?" எனவே அங்கிங்கும் அலைந்து சாட்சி தேடேன்; உன் மடியிலமர்ந்துள்ள இந்த உன் சேயே எனக்குச் சாட்சி. பின் என் வழக்கு வெற்றி பெறுமல் போகுமோ? நீ என் தாய்தான்; எனக்குதவும் . பொறுப்பு உன்னுடையதே — தாமதியாமல் அருள் துணையளிக்கவாரும் அம்மா" என்ற மன்ருட்டில் , பொதிந்துள்ள பணிவென்ன? துணிவென்ன? சேயின் பாசமென்ன? எத்துணை இறை நோக்கு? எத்தகைய இகம் கடந்த பரம ஞானக் கண்ணேட்டம் இது? இதன் கனிவையும் நினைந்து நினைந்து உருகாத நெஞ்சம் என்ன நெஞ்சமோ?

ஒவ்வொரு கவியிலும் ஒரு தனிச் சிறப்பைக் காணலாம். மனிதனை அலைக்கழிக்கும் மாயையிலிருந்து தப்ப, வானுயர் வலிமை பெற்ற தாயின் துணையின்றி இயலாது. இறைவனின் அளவற்ற அன்பின் அலாதிப் படைப்புதான் இவ்வன்னை. பல கோடி புகழ்பாடினும் அவளின் பெருமையை எட்டிப் பிடிக்க இயலாது; அவள் அன்பை அளக்க முடியாது. மக்களைக் காக்கும் மாதா தான் அவள். நம்பினேரைக் காக்கும் நல்ல தாய் அவள். இவை போன்ற தத்துவச் சிறப்புகளும் கவியில் காணப்படுகின்றன. வருணனைக் கடங்காத அருள்வளம் பொங்கும் பதிகம் இதைப் பாடிப் பாடிதான் ரசிக்க வேண்டும்.

## அன்னையின் அந்தாதி

தித்திக்கும் தேனேடு தீங்கரும்புச்சார் ஊற்றினல் எத்தகைய இனிமை பொங்கும்? இனிமை இரட்டிப்பாய் பெருகும்.

அன்னையென்றதும் அன்புப் பெருக்கெடுக்கும் தகைமையுள்ள கவிஞர் வேதநாயகர் தன்னைப் பெற்ற தாயின் மறைவால் நைந்து, நொந்து உள்ளம் கரைந்துள்ள வேளையில் அன்னை ஆரோக்கிய மாதா ஆலயம் சென்று தன்னை ஈன்ற தாயின் ஆன்ம சாந்திக்காக பலி பூசை செய்து வைக்க வந்த காலை, இருவகையன்பும் ஒன்றோடொன்று கலந்து ஒன்றையொன்று மேற்கொள்ள முனையும் வேளையில், அன்னையின் அந்தாதிபாட ஆரம்பித்தார் என்றால் அதன் கருத்துச் செருக்கும் கனிவுச் செருக்கும் கறை புரண்டோடாதோ?

இந்த சிறப்பு நிலையைத்தான் காண்கின்றோம் இவ்வந்தாதி யில். போற்றி புகழ்மாலை சூட்டி, வாழ்த்தி வருணிக்கின்றார் மாமரியின் மகத்துவத்தை. எத்தனையோ நாமங்கள் சூட்டு கின்றார். எண்ணப் பெருக்கு ஆறுயோடுகின்றது; எண்ணத் துள் புதைந்துள்ள அன்புப் பெருக்கோ கட்டு மீறி வெள்ள மாகப் பொங்க, அதில் மிதந்து வருகின்றன அநேகாநேக இலட்சணங்கள். தத்துவங்கள் குவிகின்றன; கனிவு செருக் கின்றது; நம்பிக்கை ஓங்குகின்றது; மன்றாட்டு வலுக்கின்றது; உருக்கம் உயர்கின்றது, கவிதை மணம் மிகவே கமழ்கின்றது. அனைத்திலும் அனைவருக்கும் தெளிவான எளிய நடை ஒலிக் கின்றது. என்னே இதன் பெருமை!!

இவற்றிற்கு சான்றாக சிற்சில செய்யுட்களை ஈண்டு குறித்தல் வரவேற்கத்தக்கது.

"பாரைப் படைத்து படியளப்போன் உன்தந்தை
நேரே அவன்மைந்தன் நின்மைந்தன் — சாரும்
உனக்கோர் குறையேது அன்னையே உன்தாசன்
எனக்கோர் குறைதான் இங்கேது?"

உயிரோட்டமான சத்தியத்தின் அடிப்படையில் அன்னையை அண்டினோர்க்கு குறைவேயில்லை எனும் கவிஞர் கண்ணோட் டத்தை நாம் பயில வேண்டும். நம்முள்ளும் அது உதிக்க வேண்டும்.

"ஈங்கு பரன்பாடுபட்ட இன்உடலே உன்உடலாம்
ஓங்கு (உ)திரம் சிந்தியதும் உன்உதிரம்" என்பது
பொய்யாமோ; அன்றி மிகையாகுமோ?

விசய, "கனந்தனில் மிக்காளே உன் கைப்பிள்ளையை என்
மனந்தனிலே சற்றுநீவை" என்று கோரும் சலுகை
பரஸ்பர அன்பில் பிறப்பதன்ரே?

"ஈயார் சரிகூலி, ஏசுவார் தண்டிப்பார்
ஓயாமல் வேலை கொள்வார் ஊர் ஆழ்வார்—தாயேஉன்
பாலர் ஒரு வேலை கொள்ளார், பாக்கியம் எல்லாம் ஈவார்
சாலப் பிழை பொறுப்பார்தாம்"

இது உலகறிந்த உண்மை, "பிள்ளை" என்றதும் அனைத்திலுமே சலுகைதான்; விதிவிலக்குத்தான். இதை மாற்றியமைக்க தாய்க்குலத்திற்கு ஏது சக்தி? இவ்வுண்மையை உரைக்கும் நயம் போற்றற்குரியது.

"பார் இடத்தில் அம்மா நீ பண்டுபிறவாதிருந்தால்
யாரிடத்தில் ஐயர் அவதரிப்பார்" என்று கேட்கின்ருர்

வேதநாயகர். எல்லாம் வல்லோனுக்கு, நித்திய நியமனப்படி, இவ்வழியன்றி வேறு வழி உண்டோ எனும் வெற்றி தொனிக்கும் வினவை ரசிக்கத்தான் முடியும்; விளக்க இயலாது.

"கதிநிலையே தேனே கரும் பே கற்கண்டே
மதிமயங்கி நான் மாளும் போது — கொதிநரக
நாட்டை அடைந்து நலியாமல் நான் நுழைய
வீட்டைத் திறந்துவிடு.

இவ் விநயமான மன்ருட்டு மக்களனைவரும் நாள்தோறும் விடுக்க வேண்டிய மன்ருட்டுதான். இகவாழ்வின் வெற்றி வான்வீடு எய்தல்தான். அதற்காக "நம் உயிர் உடல் அனைத்தும் இடையருது உழைக்க வேண்டும்" என்னும் பாடத்தை சிந்தனையிலிறுத்தும் சிறப்பு கவி இது.

இவ்வந்தாதியின் ஒவ்வொரு கவியிலும் ஓர் தனிநயம் மிளிர்கின்றது; தத்துவம் ஒளிர்கின்றது; பக்தி பொங்குகின்றது. இதை தினமும் தியானிக்கும் கையேட்டாகக் கொள்வது விரும்பத்தக்கது. எனவே, மாதாவின் மேல் வேதநாயகர் பாடியுள்ள பதிகத்தையும் அந்தாதியையும் பிரசுரிக்க முன் வரும் நண்பர் மாமரி பக்தர்களுக்கோர் உயரியதொண்டாற்று வோராவர்.

இதனை பிரசுரிக்க இன்னும் ஓர் சிறந்த கருத்துண்டு 'தேவதாய் ஆன்மசரீரத்தோடு விண்ணுலகம் எய்தாள்" என்பதை கத்தோலிக்கர் விசுவசிக்க வேண்டிய சத்தியமாக, பரிசுத்த தந்தை 1950-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாள் பிரகடனம் செய்துள்ளார். இம்மாபெரும் பிரகடனத்தின் வெள்ளி விழாக் கொண்டாட வேண்டிய ஆண்டு 1975-ம் ஆண்டு இவ்வெண்விழா நினைவுச் சின்னமாக, அருள் மரித் தாயின் இப்பாமாலை துலங்க வேண்டுமென்பதே என் பேராவல்.

இயேசுவின் திரு இருதய ஆலயம்
திருவில்லிப்புத்தூர்
15—1—1976

சுவாமி மரியதாஸ்

# பெரியபாளையம் அர்ச். பெரியநாயகி மாதாமேல் பதிகம்

## வெண்பா

சீலம் புனைதவத்தோர் சேர்பெரிய பாளையம்வாழ்
ஞாலம் புகழ்பெரிய நாயகியே—மூலமிலான்
தன்னையே யீன்ற தயாபரியே தாசர்தொழும்
அன்னையே யென்னையே யாள்.

தம் தொழில் சம்பந்தமாக வேதநாயகர் சென்னை ஹைகோர்ட்டுக்கு வந்திருந்தார். சென்னைக்கு அருகில் சுமார் 12 மைல் தூரத்திலுள்ள பெரிய பாளையம் கிராமத்தவரான கத்தோலிக்கர் சிலர் வேதநாயகரைத் தங்கள் ஊருக்கு அழைத்து, அங்குள்ள பெரியநாயகி மாதாமேல் என்றும் நிலைத்திருக்கும் பாமாலை பாடக் கேட்டுக்கொண்டனர். அதன்படி கவிஞர் "பெரியநாயகி பதிகம்" உளமுருகப் பாடினர். இப்பதிகத்தைப் பக்தர்களின் சொத்தாக்கினர்.

## பதிகம்

அன்னையே நின்னையே யனுதினமு மடியே
னடுத்தவன் ருனல்ல வோ ?
ஆதார மானநின் பாதார விந்தங்க
ளன்றியொரு துணையு முளதோ ?
என்னையே வந்தாண்டு கொள்வதொரு பாரமோ ?
இங்குவர வெகுதூ ரமோ ?
இன்னம்விவ காரமோ ? என்சொலப சாரமோ ?
எனைமுனிய விதுநே ரமோ ?

உன்னையே முன்னையே தஞ்சமென நம்பினே
　　　ரொருகுறையு முற்ற துண்டோ?
உலகமிசை விலகரிய கலகமிகும் அலகையால்
　　　உள்ளநான் வாடி னேனே
பின்னையு முனக்குநான் பலசொல்ல வேண்டுமோ?
　　　பேதையெனை யாண்ட ருளுவாய்
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
　　　பெரியநா யகியன் னையே. 1

வானமுத லானபல பூதபே தங்களை
　　　வகுத்தருளு நாத னுக்கே
மகளுமா யினைபின்பு மனையுமா யினைஅரிய
　　　மாதாவு மேயா யினை
ஈனமுறு சென்மமா சனுகா துதித்தனை.
　　　யெவ்வுயிரு மீன்ற பரனே
இனியசே யாகநின் கன்னிமை கெடாமலே
　　　இனிதுபெற் றமுதூட் டினை
பானுவை யுடுத்தும்வளர் மதியினை மிதித்துமொளி
　　　பாயுமுடு முடிபு னைந்தும்
பரலோக பூலோக அரசியென நீகொண்ட
　　　பாக்கியம் பேச லெளிதோ?
பீனமுறு புனலென்ன ஈனமுறு மென்மனப்
　　　பேயினை யடக்கி யருள்வாய்
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
　　　பெரியநா யகியன் னையே. 2

ஆசறு தபோதனர்க ளாவலுட னேநாடும்
　　　ஆனந்த போக நிலையே

அஞ்ஞானஇருளகல மெய்ஞ்ஞான பானுவாம்
அமலனு தயஞ்செய் மலேயே
தாசரி தயாம்புயந் தனில்வாழு மன்னமே
சமமிலா துயர்சொன் னமே
தவயோக வேடமே நவஞான பீடமே
தகைசேர் மறைக்கூ டமே
மாசறு பிரதாபமே மாணிக்க தீபமே
மங்களா கரரூ பமே
மாமதுர வாரியே நேமஅருண் மாரியே
மானிடர்க் குபகா ரியே
பேசரு மனேக்கியமே பெரியவர்கள் பாக்கியமே
பேதையெனே யாண்டு கொள்வாய்
பெரியபா ளயம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 3

ஞானமென் பதுவாழு மூரிலொரு நாளுமே
நான்குடி யிருந்தறி கிலேன்
நன்மையென் பதுபிறர் சொலக்கேட்ட தல்லாது
நானதைச் செய்த றிகிலேன்
ஈனமுறு துர்க்குண மலாதுநற் குணமென்ப
தெள்ளளவு மென்ப லிலே
இத்தன்மை யேயுடைய பித்தன்யா னுன்முன்னம்
எத்தன்மை வந்து நிற்பேன் ?
தானமுந் தருமமுந் தவவிரத யோகமுஞ்
சாந்தமொடு நீதி நெறியுஞ்
சந்ததமு மென்னிடத் தெந்தவித மேனுந்
தழைத்தோங்க அருள்பு ரிகுவாய்
பீனமணி மாடங்கள் வானளவு மேசென்று
பிறைமதியை வழித டுக்கும்
பெரியபா ளயம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 4

பண்ணுவ தெலாந்தீமை பேசுவ தெலாம்வம்பு
பாடுவ தெலாம் புன்கவி
பாதாதி கேசபரி யந்தமும் விடம்பூண்ட
பான்மை யுடையே னிதமுமே
உண்ணுவது மகிழ்வா யுறங்குவது மன்றியும்
உறங்காத நேர மெல்லாம்
ஒருகோடி பாவங்கள் புரிகுவது மேயெனக்
கொழியாத வேலை யன்றோ ?
விண்ணுடுவை நுண்மணலை யெண்ணிடினு மெனதுதீ
வினைகளெண் ணத்தொலை யுமோ ?
மேதினியின் மீதினிய ரேதினி யுனைத்தவிர ?
வினையெலா நீக்கி யருள்வாய்
பெண்ணுரு வெடுத்திந்த மண்ணுலகை யேயாண்ட
பேரின்ப ஞான மயிலே
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 5

நாசமறு மெம்பிரா னின்பிள்ளை யாயினு
நானுமுன் பிள்ளை யன்றோ ?
நாடியென் வழக்கையொரு நியாயசபை யிற்பேசி
நான்வெற்றி பெறுவ தரிதோ ?
ஈசனு முனதுதிரு மைந்தனென் வழக்கினுக்
கிசைவான சாட்சி யன்றோ ?
எங்களன்னை நீயென்ன வுன்னையரு ளப்பரிட
மேகை யளிக்க விலையோ ?
தாசர்தொழு மன்னைநீ சொன்னபடி நீரினைத்
தானிரச மாக்க விலையோ ?
தன்னேரம் வருமுனிது செய்தபர னிவ்வேளை
தானுன்மொழி தள்ளு வாரோ ?

பேசரிய நின்சுதனை மன்றுடி யேயெனது
பிழைபொறுத் தருள்பு ரிகுவாய்
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 6

அணியா லயங்களுக் கேகாத விருபாதன்
அறமொழி புகாத காதன்
அன்பினு லுருகிநீர் பெருகாத கண்ணன்
அநீதியுடை யோர்க ளண்ணன்
பணியாமல் வீணே வளர்ந்திடு சிரத்தன்
பதங்கும் பிடாக் கரத்தன்
பன்னுளு முன்னுமம் வாழ்த்தாத வாயனுன்
பணிகள்செய் யாத காயன்
தணியாத பேராசை குடிகொண்ட நெஞ்சன்
சமானமில் லாத வஞ்சன்
தடியனெரு கொடியனரு மடியனு னெனினுமுன்
தாசாதி தாச னலவோ ?
பிணியுறும் பாசவினை தணிவுறும் படியுனது
பிள்ளைதனை வேண்டி யருள்வாய்
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 7

அருந்தவர்கள் போலநான் மக்கள்மனை செல்வங்கள்
யாவுந் துறக்க வில்லை
ஐம்புல னடக்கிமெய் வெம்பிட வொடுக்கியும்
அறங்கள்நான் செய்ய வில்லை
வருந்துகுரு மார்கள்போ லெங்குந் திரிந்துபல
மானிடரை யோம்ப வில்லை

மாகொடியர் பாற்சென்று வேதசாட் சிகள்போலென்
வாழ்நாளை மாய்க்க வில்லை
இருந்தவிட மேவிட் டெழுந்திராப் பாவிநா
னெவ்வாறு கரையேறு வேன் ?
இப்படியி லேயெனக் கெப்படியு நற்குணம்
இனிப்படிய அருள்செய் குவாய்
பெருந்தவ ரிருந்தமு தருந்திட விருந்துதவு
பெரியோனை ஈன்ற குயிலே
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 8

கலையெல்லாம் கற்றவர் களாயினு முனைத்தொழக்
கல்லார்கள் கல்லார் களே
கருதியுன் புதல்வனையும் உன்னையும் பாடாத
கவிகளே கவிக ளன்றே!
உலைவுறுங் கனவறிஞ ரெனினுநின் பானேயம்
உடையார்க ளுடையார் களே
ஒருகோடி தனமுடைய ரென்னினும் உனைப்பணிய
ஒப்பார்கள் தப்பார் களே
பலனுறுங் கதியேணி நீயெனி லுனைத்தொழாப்
பதிதர்போம் போக்கென் .னவோ ?
பாலனைப் புவனபரி பாலனை யிரந்துநீ
பரகதி கொடுத்தரு ளுவாய்
பிலமருவும் அரவமென உருவமுறு பேய்த்தலை
பிளந்திட நசுக்கு மயிலே
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 9

அடியர்கள் மனோன்மணி யனந்தகுண பூஷணி
யநாதரட் சகபோ ஷணி
அமிர்தநய பாஷணி யலங்கிர்த விசேஷணி
யகோரகா ரணிபூ ரணி
நெடியவய ணும்பரி குணும்பரி தயாம்பரி
நிரம்பிய குணடம் பரி
நிரந்தரி துரந்தரி சௌந்தரி சுந்தரி
நிரஞ்சன மனோரஞ் சனி
வடிவவுடு சேகரி மனோகரி கிருபாகரி
மகேஸ்வரி சுகேஸ்வ ரிசதா
மலநிவா ரணிதவிது குலசிரோ மணியென்று
வாழ்த்தியுனை யேத்தி டாமல்
பிடிநடையர் படிபொருளை முடிவின்றி வாஞ்சித்த
பித்தனெனை யாண்டு கொள்வாய்
பெரியபா ளையம்வாழும் அரியதா யகியான
பெரியநா யகியன் னையே. 10



# தேவமாதா வந்தாதி

## காப்பு

நண்பா வந் தாதி நவை துடைத்த நாயகிமேல்
வெண்பா அந் தாதி விளம்பவே — பண்பாகத்
தானே பெருமகனைத் தாயாகக் கொண்டபரன்
கானே பெறுமலர்த்தாள் காப்பு.

## நூல்

### தேவமாதா

எண்தரும்மேல் நாவானந்தம் எய்திடினும் வான்வாழும்
அண்டருமே சொல்லற் (கு) அடங்குமோ —
தொண்டர்கள் தம்
சீவமா தாவே திரிபுவன மாதாவே
தேவமா தாவே நின்சீர். 1

### உத்தரீய மாதா

சீரில்லேன் ஞானம் சிறிதுமில்லேன் தீமைதனில்
நேரில்லேன் நீதியில்லேன் நிச்சயமே — சூரியபா
பத்தர் ஈயத் தான்கொள்ள பாலன்பால் என்குறையை
உத்தரீயத் தாயே ஓது. 2

### தரிசன மாதா

ஓதுமுனம் என்துயரை உள்ளபடி நீ அறிவாய்
ஏது மொழிவேன் எளியேன் யான் — போதக்
கரிசனம்மா ரு (து) எனக்காகக் கத்தனைவேண் டாயோ 3
தரிசன மாதாவேநீ தான்.

## உபகார மாதா

தானே இருக்கும் தனிப்பொருளே ஈன்றவளே
தேனே இருக்கும் மொழிச்செல்வியே — நானே
அபகாரத் தானேனும் ஆள் என் (று) அடுத்தேன்
உபகாரத் தாயே உனை. 4

## தேற்றரவு மாதா

உனையன்றி வே (று) இங் (கு) ஒருகதியும் இல்லேன்
எனைவந் (து) ஆட்கொள்ளாத (து) என்னே —
விண்புரியத்
தோற் (று) அரவு மாதாவே சூழச்செ யும்இடரைத்
தேற்றரவு மாதா வேதீர். 5

## சென்ம இராக்கினி மாதா

தீராத வன்பிழைகள் தீரப் புவியில் வந்த
ஓர்ஆ தவன் உதய ஒண்கிரியே — பேராத
கன்மஇ ராக் கழியக் காவலனை வேண்டி அருள்
சென்மஇ ராக்கினி யே செய். 6

## ஆரோக்கிய மாதா

செய்யேன் செபதவங்கள் சேரேன்நற் சீலர்குழாம்
பெய்யேன் விழிஅருவி பேதையேன் — மெய்யே இப்
பாரோர்க் (கு) இயல்அப் பதம்தருநீ அன்றிஎனக் (கு)
ஆரோக் கியமரி யே ஆர். 7

## அடைக்கல மாதா

ஆரடா பேயே நீ அஞ்சாமல் என்னுடனே
போரடா செய்யப் புறப்பட்டாய் — வீரப்
படைக்கலமாக் கொண்டேன் நான் பண்டு (உ) ன்னைத்
தேய்த்த
அடைக்கல மாதா சீர் அடி. 8

## செபமாலே மாதா

அடியர்க் (கு) ஆனந்தமே அற்புத மெய்யாளே
விடியற்கா லத்து(உ)டுவே மின்னே — கொடியேன்
நிபமாலே நீக்கி நிதமும் கருணே
செபமாலே மாதாவே செய். 9

## வியாகுல மாதா

செய்யும் வினேதீரும் சேரும் பரமசுகம்
உய்யும் வழியும் நமக்கு (உ) ண்டாகும் — மெய்யாம்
தயாகுலமா தேவ தநயனுக்கா நொந்த
வியாகுல மாதாவை நெஞ்சே வேண்டு. 10

## காணிக்கை மாதா

வேண்டேன் நான் அற்பசுகம் விண்மதிசேர் பொன் அடியைப்
பூண்டேன் இனிவிடேன் பூவுலகை — ஆண்டவளே
பேணிக்கை கூப்பிநின்றேன் பேரின்பம் எய்தும்வழி
காணிக்கை மாதாவே காட்டு. 11

## சிந்தாத்திரை மாதா

காட்டுவாள் நல்லவழி கற்பிப்பாள் ஞானநெறி
ஓட்டுவாள் பேயை ஒடுக்குவாள் நாட்டுசுகம்
சிந்தாத் திரைஆழி சேரநமைச் சேர்ப்பிப்பாள்
சிந்தாத் திரைஅனே நெஞ் சே. 12

## மோட்ச இராக்கினி மாதா

நெஞ்சமே தூதாக நீஓடி என்நிலேயை
வஞ்சமே இன்றி வகுத்துரைப்பாய் — செஞ்சரணில்
வீட்சஅவ் இராக்கதிராம்மென் பாதுகை பூண்ட
மோட்ச இராக்கினித்தாய் முன். 13

## அலங்கார மாதா

முன் அறியேன் பின் அறியேன் முற்றும் உணர்ந்து(உ)ன் புகழைப்
பன்னறியே னேனும்பொற் பாவையே — சொன்னேன்
இலங்(கு)ஆரம் ஆகவே என்கவியை ஏற்பாய்
அலங்கார மாமரி அம் மா. 14

## பெரியநாயகி மாதா

அம்மா மெய்ஞ்ஞானம் அடியேனுக்(கு) ஈயாமல்
சும்மா இருப்பதென்ன சோதனையோ — மும்மையுமே
தேர் பெரிய நாயகனைத் தேடிமன்றுடிஎனை
ஆர் பெரிய நாயகியே ஆள். 15

## மங்கள மாதா

ஆளாயோ சீலம் அருளாயோ என்மனுவைக்
கேளாயோ நாயேன்பால் கிட்டாயோ — வாளாதான்
வெங்களமா தாவுற்று வீயாமல் ஈயாயோ
மங்கள மாதாவே வரம். 16

## பிரகாச மாதா

வரம்வேண்டி னேன் என்றும் மாறுதஇன்பப்
பரம்வேண்டி னேன்ஞானப் பாவாய் — கரும
நரகா சனஇருளை நான்பாரா(து) ஈவாய்
பிரகாச மாதாவே பேறு. 17

## நம்பிக்கை மாதா

பேறு பெறலாம் பிணிஅறலாம் வந்தஇடை
யூறும் அறலாம் உரம்உறலாம் — மாறுகொண்டு
கம்பிக்கை ஆகிக் கலங்காதே நெஞ்சமே
நம்பிக்கை மாதாவை நம்பு. 18

## இருதய மாதா

நம்பியே வந்துன் நளினக்கழல் அடைந்தேன்
வெம்பியே வாட விடலாமோ — பம்பிப்
பொருதயமா நெஞ்சைப் புலப்படுத்திக் காப்பாய்
இருதயமா தாவே எனை. 19

## மாதரசு மாதா

எனையே கெடுக்க இடைகட்டிக் கொண்டு
வினையேசெய் பேயை விளக்கி — முனையாகும்
பாதரசம்போல் ஆடும் பாவியேன் நெஞ்சகத்தில்
மாதரசு மாதாவே வாழ். 20

## மகிமை மாதா

வாழ்வு வரினும் வறுமை பிணிவரினும்
தாழ்வு வரினும் சலியாமல் — சூழும்
மகிமைமாற் றப்பூவில் வந்தவனைத் தந்த
மகிமை மாதாவை நெஞ்சே வாழ்த்து. 21

## கப்பலேந்திய மாதா

வாழ்த்தேன்உன் சேயை வணங்கேன்உன் பொன்அடியை
வீழ்த்தேன்என் வாழ்நாளை வீணிலே — பாழ்த்தபவக்
குப்பல்ஏந் திச்செல்லுங் கோடிகலம் ஒத்தஎனைக்
கப்பலேந் தித்தாயே கா. 22

## சலேத்து மாதா

காவே அமுதே என்கண்மணியே செல்வமே
பூவே அணியே என்புந்திமிசை — வாதே
குலோத்தமபா லர்க்குக் குளிர்காட்சி தந்த
சலேத்து மாதாவே நீதான். 23

## பொறுமை மாதா

தானம்இலேன் சாந்தம்இலேன் சற்குணங்கள் ஓதுமிலேன்
ஞானம்இலே னேனும்உனை நம்பினேன் — ஈனச்
சிறுமைமா தாவாநான் செய்பிழைகள் எல்லாம்
பொறுமை மாதாவே பொறு. 24

## தயை மாதா

பொறுமை உனக்குப் புகழுடைமை அன்றோ
சிறுமைஉறும் என்மேல் சினம்஡ன் — மறுமை
இயைமா தவமே இயலும்படி நீ
தயை மாதாவே செய்தயை. 25

## நல்ல யோசனை மாதா

தய(வு)ஏதும் இல்லாத சத்துருவைத் தப்பி
உயஏது (உ)பாயம்என உன்னிப் — பயமொடு
பல்யோசனை பண்ணும் பான்மைஏன் நெஞ்சமே
நல்ல யோசனைத் தாயை நாடு. 26

## பரிபூரண மாதா

நாடுதொறும் போய்அலைந்து நைவதேன் நெஞ்சமே
வீடுபெற வேண்டில் விளம்பக்கேள் — நீடச்
சொரிபூ ரணம்போற் சுகமழையே பெய்யும்
பரிபூ ரணத்தாயைப் பற்று. 27

## நட்சத்திர மாதா

பற்றுவே றில்லைஉன்றன் பாதமேதஞ் சம்அம்மா
முற்றும் அறி(வு)இல்லாத மூடன்என்மேல் — சற்றுநீ
பட்சத் திரம்வைப்பாய் பாரில்உனை நம்பினேன்
நட்சத் திரத்தாயே நான். 28

## சகாய மாதா

நான்ஆரோ நீஆரோ என்றிருந்தால் நான்முத்தர்
ஆஞர் கணம்சேரல் ஆகுமோ — தேனே
நிகாயமா தாபரனே நீவேண்டி நன்மை
சகாயமா தாவே நீதா. 29

## இளைப்பாற்றி மாதா

தாய்நீ அலவோ தமியேன்உன் சேய்அலவோ
நாய்பேய்போல் நான்திரிதல் நன்மையோ — தீயேன்
களைப்(பு)ஆற்றி ஞானக்கதிர் அளிக்க வேண்டும்.
இளைப்பாற்றி மாதாவே இன்று. 30

## மதுரநாயகி மாதா

இன்றோ மறுநாளோ இக்கணமோ பிற்கணமோ
என்றோ(சாவு) என்றறியேன் ஏழையேன் —
பொன்றுமுன்னே
காமதுரம் ஆகியநான் காணவுன்றன் பாலனொடு
மாமதுர நாயகியே வா. 31

## சம்மனசு இராக்கினி மாதா

வாராயோ என்கவலை மாற்றாயோ ஏழைமுகம்
பாராயோ உய்யவகை பண்ணுயோ — ஈரம்இலார்
வெம்மனசு இராக்கினியே வித்தகியே உத்தமியே
சம்மனசி ராக்கினித் தாயே 32

## சலுகை மாதா

தாயே உனக்(கு) அனந்தம் தண்டம் சமர்ப்பித்தேன்
நாயேனை ஆளஇது நற்சமயம் — ஈயச்
சலிகையே இல்லாநீ சாத்துவிகந் தன்னைச்
சலுகை மாதாவே நீதா. 33

## ஜெய மாதா

தாலாட்டிப் பாலூட்டிச் சாதம் கறிஊட்டி
மேலாட்டியை வளர்த்த வித்தகியே — சாலச்
சுயம் ஆதாம் ஏவையால்சூழும் வினைநீங்கச்
செயமாதா வேகருணை செய். 34

## அமலோற்பவ மாதா

செய்கையால் வாக்கால்என் சிந்தனையால் நான்செய்யும்
உய்கைஅறு பாவம்மலை ஒக்குமே — பொய்கொள்
சமலோற் பவனுன தாசன் எனையே
அமலோற் பவியே வந்(து) ஆள். 35

## செல்வநாயகி மாதா

ஆள்அடிமை கொண்டவர்கள் ஆளக் கடனேஉன்
நீள்அடிமை நான் அலவோ நித்திலமே—மாளா
அரும்செல்வன் பால்நீ அடியேன் குறையைப்
பெரும் செல்வ நாயகியே பேசு. 36

## பனி மாதா

பேசுவேன் வாய்ஞானம் பேணுவேன் தீமைதனைக்
கூசுவேன் நல்லோர் குழாம்கண்டால்—நீசன்
இனிமா தவம்செய்திங்(கு) ஈடேறும் வண்ணம்
பனிமாதா வேநீ கண்பார். 37

## தேவமாதாவுக்குப் பொது

பாரே படைத்துப் படிஅளப்போன் உன்தந்தை
நேரே அவன் மைந்தன் நின்மைந்தன் —சாரும்
உனக்கோர் குறைஏ(து) அனையேஉன் தாசன்
எனக்கோர் குறைதான் இங்(கு) ஏது. 38

ஏதும்ஒளி இல்லாத இந்(து)இரவி தாரகைஉன்
பாதுகையாய் ஆடையாய்ப் பண்முடியாய் — மாதாவே

மின்உருவாம் உன்உருவின் மேவுறலாலே ஒளிரும்
என்னவறி யேனுேநான் ஈங்கு. 39

ஈங்குபரன் பாடுபட்ட இன்உடலே உன்உடலாம்
ஓங்கு(உ)திரம் சிந்தியதும் உன் உதிரம்—மாங்குயிலே
இன்னநிலை தேரு இதர சமயத்தார்
என்னநிலைபெறுவா ரே. 40

ஆராரோ என்றுநீ தாலாட்டும் அற்புதர்தாம்
வாராரோ நீயே வரவழைக்கில்—நேரில்சுகம்
மன்அகத்தார் ஆகியநின் மைந்தனுர் தம்மைஅம்மா
என் அகத்தார் ஆக்கி அருளே. 41

அரும்மதியே நீதான் அரும்மதியே உள்ளாய்
தருமவதி பாதத்தைச் சாரும் — பெருமைஉற
என்னஉபாயம் எடுத்தாய் எனக்(கு) அதனை
இன்னதென நன்ருய் இசை. 42

இசைமேவும் ஆலயமே என்உயிரே கண்ணே
வசையே இலாத மயிலே — விசய
கனம் தனில்மிக் காளேஉன் கைப்பிள்ளை யைஎன்
மனந்தனிலே சற்று நீவை. 43

வையகமே நீஎன் மனத்தில் குடிபுகில்உன்
கையகம்ஆர் சேயும் கலந்திருக்கும் — ஐயனெடு
தந்தையரும் இஸ்பிரீத்து சாந்தும் இருப்பார் எனக்கு
சுந்தரியே என்ன குறைசொல். 44

சொற்குள்அடங் காபரஞ் சோதிதனை ஈன்றவளேத
நற்குண மெய்ஞ்ஞான நடையாளே — நிற்குநிலை
ஒன்றும் படியாநான் உய்ந்திடவே ஞானநிலை
ஒன்றும் படிநீ உதவு. 45

உதயன் தனையே உடுத்தவளே நீஎன்
இதயம் தனிலே இருந்தால் — நிதம்என்
மறஇருள்எல் லாம்நீங்கும் மற்றுன் கலையால்
புறஇருள்எல் லாம்நீங்கல் போல் 46

போலிநடை யார்என்போல் பூவில்ஒருவர் உண்டோ
வேலிதா னேபயிரை மேய்ந்ததுபோல் — கோலி
அகமே எனைக்கெடுக்க அஞ்சினேன் அம்மா.
அகமே தொலைத்(து) என்னைஆள். 47

ஆளும்அர சர்தமக்(கு) ஆளடிமைப் பட்டேபல்
நாளும் கழித்துவிட்டேன் நான்தாயே — நீள
உனக்கும்உன் சேய்க்கும் இனி ஊழியமேசெய்ய
எனக்கு நீநல்ல வரம்ஈ. 48

ஈயார் சரிகூலி ஏசுவார் தண்டிப்பார்
ஓயாமல் வேலைகொள்வார் ஊர்ஆள்வோர் — தாயேஉன்
பாலர்ஒரு வேலைகொள்ளார் பாக்கியம் எல்லாம்ஈவார்
சாலப் பிழைபொறுப்பார் தாம். 49

தாம்அரவத் தன்மையார் சாந்தரையும் தீயர்என்பார்
பாமரரைப் பண்டிதர்போல் பாவிப்பார் — மாமயிலே
உள்ளநிலை உள்ளபடி யேஉணரும் உன்னைப்போல்
வெள்ளைநரர் காண்பாரோ மெய். 50

மெய்யெல்லாம் பொய்யே விவேகம்அவி வேகமே
பொய்யெல்லாம் மெய்யேஇப் பூவார்க்குத் —
துய்யமின்னே
உள்ளங்கை நெல்லிபோல் உள்அறிவ(து) அன்றேநீ
கொள்அம் கைப்பிள்ளை குணம். 51

குணமுள்ளா ரேனும் குறையில்லா ரேனும்
பணமில்லார் கீழோர்இப் பாரில் — உணர்வுடையோய்
சீலரையே மேலாக்கித் தீயவரைத் தாழ்த்தும் உன்றன்
பாலரையே சேரப் பயன். 52

பயன்இன்றிப் பேசும் பசுங்கிளிபோல் பாக்கள்
நயன்இன்றிப் பாடினேன் நானே — தயவாக்
குறைஅதனை நீக்கிக் குணமாக்கிக் கொள்வாய்
இறையவனை ஈன்றஅனை யே. 53

அனைபிதா ஆனோர்க்(கு) அமைய நெறிபண்(டு)உன்
தனையர் மோயீசற்குத் தந்தார் — இனையவர்தாம்

தம்ஆய்ஆம் உன்மொழியைத் தள்ளுவரோ என்மனுவை
அம்மா அவர்க்(கு) அறைவாய் ஆய்ந்து. 54

ஆயே உனைஅன்றி ஆதாரம் வேறும்உண்டோ
நீயே எனைவிடுதல் நீதமோ — தூயபசு
பொய்க்கன்றுக் கும்பால் பொழியுமே நான்உனக்கு
மெய்க்கன்(று) அலவோ விளம்பு. 55

விளம்பம்ஏன் அம்மா விருத்தாப் பியனுய்
இளம்பருவ மேநீத்த என்னை — வளம்படவே
செய்யிற் குறை(வு)ஆமோ தேசோ மயமாய்நான்
உய்யிற் குறை(வு)ஆமோ ஓது. 56

ஓதற்(கு) அரியவளே உத்தமியே புத்தமுதே
போதக் கடலே புராதனியே — சாதுக்கள்
வந்தனையே செய்யும் மனேகரியே நீஎன்பால்
வந்துஅனையே ஈவாய் வரம். 57

வரம்ஒன்று வேண்டினேன் மாதாவே கேளாய்
பரம்ஒன்றும் நின்சுதனுர் பண்ணும் — கிரம
நலப்பக்க மான நடுத்தீர்வை நாளில்
வலப்பக்கம் தன்னில்எனை வை. 58

வையகத்தைப்பற்றி மனத் தில்வளர் ஆசைத்தீ
வைஅகத்தைப் பற்றிஎரி வன்னிஒக்கும் — மெய்அனையே
என்னையே ஆளாக்கா(து) இன்னும்சும் மாஇருத்தல்
என்னையே ஆளாய் இனி. 59

இனியார் உனைப்போல் இகம்தன்னில் அம்மா
இனிஆர் உளர்இங்(கு) எனக்கே — தனியாக
நின்றனையே நாடி நினைந்து(உ)ருக என்நெஞ்சில்
நின்(று) அனையே ஆண்டருள்வாய் நீ. 60

நீஆரோ நான்ஆரோ என்பதுபோல் நீஇருந்தால்
காயாரோ பேயார் கனல்போலே—தாயாரே
பார்இடமே முத்திஎனப் பாசவலை பூட்டும்மயல்
பாரிடமே நீங்கக்கண் பார். 61

பார்இடத்தில் அம்மாநீ பண்டுபிற வாதிருந்தால்
ஆரிடத்தில் ஐயர் அவதரிப்பார் — நீரிடத்தில்
அல்லாது (உ)ண்டாமோ அரவிந்தம் வானில்அன்றி
நில்லாது சூரியனும் நேர். 62

நேரம் வருமுன்னே நின்வார்த்தை தள்ளாமல்
ஆரும் அறியவே ஆறுகுடம் — நீரை
இரசமாச் செய்தவர்இப் போதுமறுப் பாரோ
பரச(அ)ரிய தாயே பகர். 63

பகர(அ)ரிய தாய்நீ என்பக்கத்(து) இருந்தால்
சிகரம் உறும்மீனும் தெவ்வும் — பகலோனும்
உன்னுடன்என் பக்கத்(து)உறையும்என லால்இருள்தான்
என்னுடன்சே ராதே இனி. 64

இனியநீ பேய்த்தலையை எற்றிநசுக் காயேல்
சினஉருவம் கொண்டு திரிந்தே — தினமும்
உயிரோடும் எங்களை உண்ணுமல் விடுமோ
செயிர்ஓடும் மாதாவே செப்பு. 65

செப்பு(அ)ரிய தாயேநின் சேய்இறக்கும் காலைஅருள்
அப்பரிடம்நீ எங்கட்(கு) அன்னைஎன — ஒப்பமிடும்
இம்மரண சாதனத்தை எண்ணுதார் நண்ணுதார்
தம்மரணந் துன்மரணம் தான். 66

தானே வருநிதியைத் தள்ளுதல்போல் சாம்போது
கோனே கொடுத்த குணநிதியை — வானே
புகழ்மரிய நாயகியைப் புண்ணியபீ டத்தை
இகழ்வதேன் பொய்மதத்தா ரே. 67

ஆர்இருந்தும் என்ன அரசர் இருந்தும்என்ன
ஊர்இருந்தும் என்ன உபகாரம் — சீர்இருந்த
நீயே எனக்கு நிதமும் துணையல்லால்
ஆயேஎனக்கு வே(று) ஆர். 68

ஆரேனும் சாம்போ(து) அறைந்த மொழிதள்ளுவரோ
நேரேபரன் இறக்கும் நேரத்தில் — பார

உலகத்தர் யாத்தந்த உத்தமியை உன்னுக்
கலகத்தார்க்(கு) இல்லை கதி. 69

கதிநிலையே தேனே கரும்பே கற்கண்டே
மதிமயங்கி நான்மாளும் போது — கொதிநரக
நாட்டை அடைந்து நலியாமல் நான்நுழைய
வீட்டைத் திறந்து விடு. 70

விடுவிடு நீபேயே விடமனம் இல்லாயேல்
படுபடு முன்பட்டதுபோல் பாரில் — கெடுகெடுநீ
உன்தலையை யேதேய்த்த உத்தமிபொற்ருள் மகுடம்
என்தலையில் சூடினேன் யான். 71

சூடினேன் உன்தாளைச் சோதிஉடு சேகரியே
பாடினேன் உன்னையும்உன் பாலனையும் — நாடினேன்
நித்திய நிராமயனை நீ வேண்டியே எனக்குச்
சத்திய அபேதநிலை தா. 72

தாழ்வோர் உயர்வர் தருக்கித் தரணிமிசை
வாழ்வோர்தாழ் வார்எனும்முன் மாற்றத்தைச் —
சூழ்மயிலே
உன்னிடமே கண்டேன் உதயன்மதிகீழ் இருக்க
மின்னிடுமே உன்தலைமேல் மீன். 73

மீன்வயிற்றில் யோனுவை வியாமலே காத்த
கோன்வயிற்றில் வந்தகுலக் கொடியே — ஈனம்அற
நின்னை அண்டிவந்தோரை நீக்காமல் காத்திடும்நீ
என்னை அண்டி ஆளாத(து) என். 74

என்ன புதுமை இரவியும்மீ னும்சசியும்
மன்னவே ஓரிடத்தில் வாழுமோ — அன்னவைகள்
அத்தனையும் கண்டேன் அணைமரிதன் மெய்யிலே
அத்தனையும் கண்டேனே அங்கு. 75

அங்கும் இங்குதானே அகண்டபரி பூரணமாய்
எங்கும் நிறைந்திருக்கும் ஈசனையே — நங்காய்
அகட்டிடை எவ்வண்ணம் அடக்கினுய் நீபால்
புகட்டினை(து) எவ்வாறு புகல். 76

புகலிடம்தான் நீயும்உன்றன் புத்திரனும் அன்றி
அகல்இடம் தன்னில்வேறு ஆரே — சகல
சராசரமும் ஈன்றுனைத் தான்ஈன்ற தாயே
பராமுகம் ஏ(து)இன்னமும்என் பால். 77

பாலன்போல் நீயுமே பாவிகள்நோ யாளிகள்தம்
பால்அன்பு (உ)ளாய்இதனைப் பார்த்தறிந்தேன் — மேலோய்
கயரோகம் உற்ற களங்க மதிக்குத்
தயவாகத் தந்தாயே தாள். 78

தாள்பூண்டேன் நீஎன்னைத்தள்ளினுமே நான் போகேன்
வாள்பூண்ட கண்ணியர் தம்மரல்நீக்கிக்—கோள்பூண்ட
காட்டுவாய் ஆதி கடவுளையே ஈன்றவளே
காட்டுவாய் நீ ஞானக்கண். 79

கண்ணான நின்சேயன் காவலன்ஆ னாலும்எனக்(கு)
அண்ணன் அலவோநீ ஆய்அலவோ — பெண்ணரசே
முன்னேநீ பெற்றஅந்த மூத்தபிள்ளை தன்னிடத்தில்
பின்னே பெறும்மகற்காப் பேசு. 80

பேசுவதெல் லாம்பொய்யே பேணுவதெல் லாம்பவமே
ஏசுவதெல் லாம்மறையை என்தாயே — காசினியில்
நீயே இரங்கி நெறியை அருளாயேல்
நாயேனுக்கு (உ)ண்டோ நலம். 81

நலம்இல்லேன் ஞானம்இல்லேன் நைவினையை நீக்கப்
பலம்இல்லேன் பண்பில்லேன் பாடும்—புலம்இல்லேன்
என்தாயே நீதான் இனியரையே கைவிடேன்
என்றுயே ஆள்வாய் இனி. 82

இனிய குயிலே இரத்தினமே தேனே
கனியே கனகமே காவே — இனியேனும்
செல்வாக்கு (உ)டைய உன்றன் சேயன்தனைப்பாட
நல்வாக்(கு) எனக்குநீ நல்கு. 83

நல்லபுதுமை இது நான் எங்குங்கண்டதில்லைச்
சொல்ல (அ)ரியஜூர்கன்னி சூலாகித் — தொல்உலகில்

தன்அப்ப ணைப்பெற்றுத் தாய்மகன்என்(று) ஆயினுள்
என்ன (அ)ப்பாகாட்சி இது. 84

இதுவோ அதுவோ ஏதுவோ தே(வு)என்று
மதுவே உண்டார்போல் மயங்கும் — மதிஇலரே
நீர்தொழும் வெய்யோனை நிலாமீனைக் கேட்டறியும்
பார்தொழும் எம்மாதாவின் பண்பு. 85

பண்(பு)இல் மதியேநீ பாழ்த்தாய்உன் பேர்கொண்ட
தண்பால் மதிதான் தவம்முயன்று - நண்புறுதாய்
பொற்ருமரை அடியைப் பூண்டதுநீ வீணுகப்
பெற்ருய் மதி என்னும் பேர். 86

பேருக்குக் கிறீஸ்தவரே பேத மதத்தாரே
மார்க்க மரிஇலளேல் மாதேவர் - பார்க்குள்வரார்
சீர்உண்டோ தந்தைசினம் தீர்வதுண்டோ
கிறிஸ்தவர்என்
பேர்உண்டோ காணும் அதன்பின். 87

பின்ன நரர்க்குப்பெரிய பேரிட்டுக் கைகட்டி
முன்னம் வணங்கி மொழிகுளறித் — துன்னுகின்றீர்
தேவாதி தேவன் திருமாதா சீறடியை
மேவாத நும்சன்மம் வீண் 88

வீணரேனும் தாயரைச்செய் விறல்கொள் வீரேல்
சீணமா சோ(டு)அவரைச் செய்வீரோ — பூணும்வலி
கொண்டவன்தன் தாயைக் குறைஉறவே ஆக்குவனே
அண்டுமின் மாசு(இ)ல்லாள் அடி. 89

அடியேன்நான் அன்ருேநீ ஆண்டவள்தான் அன்ருே
கொடியேனைத் தள்ளல் குணமோ — நெடிய
கலைமதியைப் பூண்ட கழலோய் எனக்குக்
கலைமதி உண்டாக வழிகாட்டு. 90

காட்டுக்(கு) எறித்த கதிர்நிலவும் பாழான
வீட்டுக்கு வைத்த விளக்கும்ஒப்(பு)ஆம் - ஆட்டும்
பணிஆர் உருவப் பசாசைத் தேய்த்தானைப்
பணியார் தம் கல்விப்பயன். 91

பயன்இல்சொல் கூறுவதில் பண்டிதன்நான் அம்மா
பயன்இல் பசுஒத்தேன் பாரில் — நயமணம்இல்
பூவுக்கும் ஈயாத பொன்னுக்கும் ஒப்(பு)ஆனேன்
பூவுக்கு நான்ஓர் பொறை. 92

பொறையும் நிறையும் புகழும் உடையாளே
மறையும் புகழும் மாண்பாளே — அறையும்
குறையும் கறையும்இல்லாக் கோதையே என்நோய்
குறையுந் தரம்நீ கொடு. 93

கொடுமை உறும்மரணக் கூற்(று)என்பால் வந்து
கடுமை செயும்பொழுது கண்ணே — அடியேன்
திருக்குடும்பத்(து) ஆயிரமாம் தீதுகளும் தீரத்
திருக்குடும்பத் தோடுவந்து சேர். 94

சேரும் சிலேட்டுமமும் திக்குமுக்கு விக்கலொடு
சாரும் பலதுன்பம் சாம்காலை — ஆருமே
அப்பொழுது (உன்)நாமம் அறைவ(து)அரி(து)
ஆதலால்
இப்பொழுதே போற்றவரம் ஈ. 95

ஈகைக்கு (உ)ரியாளே எண்ணற்(கு) அரியாளே
வாகைக் கொடியாளே வான்அமுதே — தோகாய்
கடுகின் கலமலையைக் காட்டும்பேய் ஓட்டக்
கடுகி நலம் வந்து கா. 96

காவேவா கண்ணேவா காவேவா சீரேவா
பூவேவா பொன்னேவா பொட்டெனவா — தீவேவா
அஞ்சுதலை நாகம்எனும் ஐம்புலனால் நான்கொண்ட
அஞ்சுதலை எல்லாம் அற. 97

அறமார் கடலே அருள்நிலையே என்றும்
துறவோர்கள் நாடும் சுகமே — அறவே
உழைத்து (உ)ருகியேநான் உயிர்விடும் காலத்தில்
அழைத்து வாநின் பாலனை. 98

பாலகனைப் பாலகனாப் பாரிடத்தில் ஈன்றானை
மால்அகம் இல்லாத மனோன்மணியைச் — சால்
நடப்போரைக் காப்பானை நாடுவமே நெஞ்சே
கடப்போம் வினைச்சக் கரம். 99

கரம்அஞ் சலிசெய்யக் கண்அருவி பாயச்
சிரம்வணங்க வாயும் செபிக்கப் — பரமன்
உதயமே செய்தகுண ஓங்கல் அன்னாள்தாளை
இதயமேநீ என்றும் எண். 100

# தனிப்பாடல்கள்

## வெண்பா

1 வானத்தான் மோக்கத்தான் வையமுத லானபல
தானத்தா னுயிருந்த தற்பரமன் — ஈனத்தேன்
நெஞ்சத்தா னுயினுன் நீங்கா னினியெனக்கோர்
தஞ்சத்தா னுயினுன் தான்.

2 என்னுளமே! நாஞே ரிதோபதே சஞ்சொலக்கேள்
மின்னுளமே சுத்தேறும் வித்தகரை — உன்னுள்ளே
வைத்தன்பாய் மூடி வழியடைப்பா யேற்புறம்பே
எத்தன்மை போவா ரிவர்.

3 ஆவியே! கண்ணே! அறிவுக் கறிவே என்
சீவியமே! காவியமே! சேசுவே! — பாவியெனை
இவ்வுலகிற் றண்டித் திடினுமது சம்மதமே
அவ்வுலகிற் றண்டியா தாள்.

4 எருசலே மாலயத்தி லேத்துசிமி யோன்போல்
திருமதலை யாய்வந்த தேவன் — உருவைநாம்
கண்ணுறப்பெற் ருேமில்லை கையி லெடுத்தேத்தி
எண்ணுறப்பெற் ருேமிலை நெஞ்சே.

5 கோதில்லை மேற்புறணி கொள்கணுவு மேயில்லை
தீதில்லைச் சற்றும் தெவிட்டில்லை — மேதினியில்
உன்னமனந் தித்திக்கு மோதவாய் தித்திக்கும்
கன்னிமரி யீன்ற கரும்பு.

6 எண்ணரிய பல்லுயிர்கட் கில்லிடமெல் லாங்கொடுத்த
அண்ண லுனக்கோ ரகமிலையோ — நண்ணுபசு
மந்தையோ நின்வீடு வன்புல்லோ நின்னமளி
கந்தையோ நின்றன் கலை.

7 கரிபரிதே ரின்றிக் கருமுகிலை யூரும்
பரியாகக் கொண்ட பரனே — கருமுகில்போல்
அண்டமெலாம் சுற்று மதிலுமதி வேகமே
தொண்டன்மனத் தெறியெங்கும் சுற்று.

8 கொண்டலே! இன்றுனக்குக் கோடி நமஸ்காரம்
அண்டர்கோ னுன்மேல் அணைத்தேறி—விண்டலத்தில்
சாரிபோம் போதுநீ தாண்டியே ஓடிவந்து
வீரியனை என்பால் விடு.

9 தன் கரமீது அண்டமெலாம் தாங்கும் பராபரனை
நின் கரமீது ஓயாமல் நீ கொண்டாய்—நன்குஎன்மனம்
நீ தனை வைத்தால் அம்மா நீயும் இளைப்பாறலாம்
வேதனை போய் நானும் உய்குவேன்.

10 கந்தைஉடை முள்ளின்முடி கால்வெறுமை உள்ளஐயர்
சந்திரமென் பாதுகை விண்தாரைமுடி — அந்தம்உறு
ஞாயிறு உடையோடு பலநன்மை எலாம் நிற்குந்தார்
தாயே உன்பால் அன்பால் தான்.



இராகம் — கமாஸ் — ஏகதாளம்

பல்லவி

தாயே எனக்குதவி நீயே — உந்தன்
சேயனே வேண்டிவினை — தீர்த்தருள் வாயே (தாயே)

அநுபல்லவி

தூய கருணை வாரிதியே — மல
மாயை யிருளகற்று மதியே — புண்ணியவதியே என்தன்
(தாயே)

சரணங்கள்

1 ஈய நல்வரங் கிடையாதோ — என்னைத்
தூயவனுக்கத் தடையேதோ—இன்னம் — வாதோ
என்தன் (தாயே)

2 தொண்டனைக் காத்திடில் குறையா — கொடுந்
தண்டனை செய்வதென்ன முறையா இது — பொறையா
என்தன் (தாயே)

3 நான் படுந்துயர் என்ன சிறிதா — இதைப்
போம்படி செய்வதுனக்கரிதா —இது —பெரிதா (தாயே)

4 உன்பதம் அன்றித் துணையேது—என்தன்
துன்பமகற்றிலுண்டோ தீது — இது — தகாது (தாயே)

5 அடுத்த அடிமை நானலவோ — சும்மா
படித்துப் படித்தினமுஞ்சொலவோ — வேலைபலவோ
(தாயே)

6 தஞ்சம் வேறில்லை கதி நீயே — பிர
பஞ்சத்துயர் அகற்றுந் தாயே—அருள் வாயே (தாயே)

7 மாசற்ற இருதய அனையே — உன்னை
நேசித்தவர்கள் செய்யும் வினையே — தீர — நினையே
(தாயே)

8 தஞ்ச மென்றோடி வந்தேன் நானே — எனை
அஞ்ச லென்றருள் பசுந்தேனே — தொழு — தேனே
(தாயே)

9 வேதநாயகன் தொழுந்திருவே — சற்பிர
சாதக் கனி பழுக்குந்தருவே — மறை—உருவே (தாயே)

## திருச்சிராப்பள்ளி புனித ஆரோக்கிய அன்னை பேரில் பாடியது

தம்மை ஈன்றெடுத்த அன்னை ஆரோக்கிய மரியம்மாள் மரிக்க, அன்னையின் கடைசி வேண்டுகோளின்படி, அன்னையின் சேமிப்புப் பணம் ரூ. 400/–ஐ எடுத்துக்கொண்டு திருச்சி ஆரோக்கிய அன்னையின் ஆலயத்திற்கு வந்து மத வழிபாடுகள் நடத்தும்படி பேரருள்தந்தை லூயிஸ் வெர்தூர் (Louis Verdure) என்ற ஞானப்பிரகாசம் சுவாமிகளிடம் 1872-இல் கொடுத்தார். ஈன்ற அன்னை மரிக்க, அனைவருக்கும் அன்னையாம் மாமரியை, தயாபரியை எண்ணினர். எழுச்சி பெற்றுப் பாடினர்.

இராகம் — காம்போதி — ஆதிதாளம்

பல்லவி

என்னையாளுவாய் தயாபரியே — தாசர்
இதயகமலந்தனில் — உதயஞ்செயும் பிரகாசி (என்னை)

அநுபல்லவி

சொன்னம் நவமணிகளால் — மின்னுந் திரிசிரபுரந்
தன்னில் வளரும் பிரபல மின்னரசியே
பன்னரு மதுரம்நிறை — நன்னயக் கோகிலமேசௌ
பாக்கியம் நிறைந்திடும் — ஆரோக்யமரியே
கிரியே (என்னை)

சரணங்கள்

1 வன்மமான ஞாயமே தென்னம்மா — அன
வரதம் உனைத்துதிக்க - விரதங்கொண்ட
என்மீதுவன்மமா
கன்மநிக்கிரகஞ் செய்தரு நன்மையனுக்கிரகஞ் செயுங்
கற்பகத்தருவை நிகர் — அற்புத மின்னே
ஜென்ம மாசணுகிடாத — தன்மபத்தினியே ரத்ன
தீபிகையென வொளிர்—சொரூபியே பிரதாபியே (என்னை)

2 வேத ஞானபோதமே யருள்வாய் — திக்கு
விஜயஞ் செயுந்தவீதின் — இசையுஞ்சு கோத்திரியே
— வேத

ஆதியந்த மறு பரஞ்சோதியை அநாதியை
அற்புதமாகவே பெற்ற — கற்பின் மயிலே
பாதிமதியை மிதித்த — நீதி வடிவே சுகந்த
பங்கய பொற்பீடமிசைத் — தங்கும் அன்னமே
சொன்னமே (என்)

3 அன்னையே நீ என்னை முனிவதென்னே — நிதம்
அபயம் அபயமென்றுன் — உபயபதந் தொழுதும்
அன்னையே

அன்னம்மாள் தவத்துதித்த — உன்னத வரப்பிரசாத
அத்தியந்த மனோக்கியமே — சத்திய வாக்கியமே
கன்னியர் சிரோமணியே — நன்னய சம்பூரணியே
கவிசொல் வேதநாயகன் — புவியிற் பணிமணியே
(என்னை)



## திருச்சி தருமநாதபுரம் புனித ஜெபமாலை அன்னையின் பேரில் பாடியது

சந்தா சாகிப் அரசரிடமிருந்து தர்மமாகப் பெற்ற இடத்தில் வீரமாமுனிவர் மாதாவின் மகிமை விளங்க ஜெபமாலை அன்னை ஆலயம் ஒன்று கட்டினுர். ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னையை 'பிள்ளைக்குட்டி மாதா' எனப் பல மதத்தினரும் புகழ்ந்து தரிசிக்க வருவார்கள்.

திருச்சி வந்திருந்த வேதநாயகர், தர்மநாதபுரத்தில் முனிசிபல் கவுன்சிலராக இருந்த ஐயாக்கண்ணுப்பிள்ளையின் வீட்டில் தங்கினுர். அவரது வேண்டுகோள்படி 'பழைய கோயில்' எனச் செல்லமாக அழைக்கப்படும் ஜெபமாலைமாதா கோயில் நாயகி மேல் பாடிப் பரவசமடைந்தார்.

### இராகம் சாவேரி—ஆதிதாளம்

### பல்லவி

அனுக்கிரகஞ் செய்தருள்வாயே – நித்திய
அமலனையுதவிய தாயே (அனுக்)

### அநுபல்லவி

இனக்குயிற் பொழில்சூழும் எழில்தருமபுரம் வாழும்

### முடுகு

தனக்கடலே என்தன் - மனக்குறை தீர்த்தறச்
சாலைவளர்க்கும் ஜெப — மாலை மரியம்மனே (அனுக்)

### சரணங்கள்

1 அற்பவாழ்க்கையைச் சதமென நாடிப் — பாவம்
அநுதினமும் புரிந்தேன் பல கோடி
செப்பருந்துயரா லென்மனம் வாடி — வந்தேன்
தேவதாயேயுன் பாதாம் புயந்தேடிக்

## முடுகு

கற்பனை கடந்த ஞானவிற்பன விஸ்தாரியே
கங்கு கரையின்றி அருள் — பொங்குசுகவாரியே
தற்பரன் திருவுளத்தில் உற்பவ குமாரியே
சந்திரனைப் பதந்தனில் அணிந்திடு சிங்காரியே (அனுக்)

2 சகஸ்திரகிரண அருணாம்பரியே — ஒளிர்
தாரகை மகுட தயாம்பரியே
மகத்வ மிகு பூமண்டலேஸ்வரியே — நித்திய
மங்கள இங்கித மனோகரியே.

## முடுகு

ஜெகத்தில் மெய்ஞ்ஞானமே மிகுத்தன்பு கூரவுந்
திகைத்திடச் செயும் பலவகை துயர்தீரவும்
அகத்திருள் அகன்றருஞ் சுகத்திலே சார்வும்
அந்தமதில் வந்துனது மைந்தன் அடிசேரவும் (அனுக்)

3 ஆசாபாசப் பேய்செய்யும் வஞ்சம் அம்மா — வீண்
ஆரவார மாயப் பிரபஞ்சம் அம்மா
நேசங் கொண்டயர்ந்தேன் என்னெஞ்சம் அம்மா—இனி
நின்பதமே யெனக்குத் தஞ்சம் அம்மா.

## முடுகு

சூசைமா முனிவரிடம் நேசமிகு சீலியே
துற்குண இருளகற்றும் நற்கிரணமாலியே
தாசன் வேதநாயகன் தமிழ்க்கனு கூலியே
தத்தரவு மத்தக மிதித்திடு பொற்காலியே (அனுக்)

அர்ச். தேவமாதாவின் பேரில்

# மாணிக்கமாலை

# முன்னுரை

*மாணிக்கமாலை* என்ற நூலை இயற்றியவர் யார் என நான் அறியேன். 1929 ஆம் ஆண்டு சென்னை இராயபுரம் புனித இராயப்பர் கோவில் பங்குத் தந்தை தவத்திரு தே. மரி ஞானப்பிரகாசநாத சுவாமிகளின் அனுமதியுடன் வெளியீடப் பெற்ற நூல் ஒன்று என் பார்வைக்கு வந்தது. இதை மரியன்னைப் பக்தர்களுக்கு அமுதாகப் படைக்க ஆவல் கொண்டு வெளியிடு கின்றேன். மாணிக்கமாலையை இயற்றியவரை அறிந்த அறிஞர் பெருமக்கள் எமக்கு தெரிவித்தால் நலமாக அமையும். இந்நூலைக் கொடுத்துதவிய வேம்பாறு கலைஞர் திரு. தம்பி ஐயா பர்னாந்து அவர் களுக்கு என் நன்றி.

QTR No. 182
Sector No. 47
**CHANDIGARH-3.**

M. ஜோசப் அந்தோனி

அர்ச். தேவமாதாவின் பேரில்

# மாணிக்கமாலை

## காப்பு

### நேரிசை வெண்பா

சேனுக்கோர் சேணியாய் செங்கதிர்சூ ழம்பரிமேல்
மாணிக்கமாலை வழுத்துதற்கு — வேணிக்கொள்
அம்புலிமேல் வைத்த அரும்பதத்தை யெந்நாளும்
நம்புமென் நாவைப்பாய் நயந்து.

### கலித்துறை

1 சீர்பூத்திலங்கிய விண்ணொடு மண்ணுந் திரைபரவும்
நேர்பூத்திலங்கிய மாதவத்தாள் கற்பு நேர்நெறியால்
வேர்பூத்திலங்கிய மாணிக்கமாலை விளைந்தெழுந்து
பார்பூத்திலங்கிய பாமாலை நாற்பதும் பாலிப்பனே.

2 ஆதாரநீயன்றி வேறோர் துணையெனக் காரணையுன்
பாதாரவிந்த பதம்பணிந்தேனென் பவம்பொறுக்க
வேதாபிதாவின் சுதனுன்றன் மைந்தனை வேண்டியருள்
மாதாவேராச கனிமரியேகற்பு மாணிக்கமே.

3 கிருபைதயாபர மேதேவேவாக்கிய மேகிரணம்
ஒரு பொருளாகிய ரோசவின்பூமண மோங்குகின்ற
அறுவேதிரித்துவத் தாலயமேநற் கருணையருள்
மறுவணுமற்ற மலர்மரியே கற்பு மாணிக்கமே

4 திரணத்துளாகிய பூலோகவாழ்வையென்
சிந்தையெண்ணிக்
கரண்வைத்த பேயிட்ட கண்ணியிற் பூண்டு
. கலங்கி நொந்தேன்
முரணுற்றபாவத்தின் கட்டறுத்தே முத்திசேர்வதற்கென்
மரணத்தில் வந்துதவாய் மரியேகற்பு மாணிக்கமே,

5 ஞானப்பரஞ்சுட ராகியசேசுவை நாணிலத்தோர்
ஈனமிகும்பவ மானதகற்றிட வீன்றெடுத்துத்
தானவனுதி பிதாவருள்பெற்றுத் தங்குகொங்கை
வானமுதூட்டிய மாமரியேகற்பு மாணிக்கமே.

6 புத்திமயங்கிக் குருடாகிப்பாவப் பொறியிற்சிக்கிப்
பத்துநெறிநட வாதிருந்தேன்பர லோகவழிக்
குத்தமநல்ல மனஸ்தாபத்தோ டடியேன்வரவே
மத்திசமாய்வந் தருள்மரியேகற்பு மாணிக்கமே.

7 பெண்ணுசையீனத்தின் மோகவிகாரப் பெருங்கிடங்கில்
விண்ணுடெனுங்கதி வாழ்வைமறந்து விழுந்துவிட்டேன்
பண்ணுதபாவ பரமதுரோகிக்குன் பாலன்முன்னே
மன்ருடவேணு மணமரியேகற்பு மாணிக்கமே.

8 உலகம்பசாசு சரீரம்பெண்ணுசை பொன்னுசையைந்தோ
டலகைப்பொறியி லென்னுத்துமந் தன்னையழுத்துதையோ
இலகுந்துணையென நானம்பினேனுனை இத்தரையில்
மலரும்பரஞ்சுடரே மரியேகற்பு மாணிக்கமே.

9 ஞானச்சொரூபப் பரஞ்சோதிநாயகர் செய்நன்றியை
ஈனமிகும்பெரும் பாவத்தினுலிகழ்ந் தேநடந்தேன்
வானிலுயர்ந்த சுடரேசுடரைக் கடந்தவளே
வானவர்சிந்தை மகிழ்மரியேகற்பு மாணிக்கமே.

10 கலைஞானசூரிய ளுகிவிளங்கிய கர்த்தர்தந்த
நிலைஞானவேதப் படிநடவாத நிட்டூரனுக்குத்
தலைஞானச்சூரியன் றன்னைப்பயந்த தவக்கொழுந்தே
மலைஞானந்தந்துதவாய் மரியேகற்பு மாணிக்கமே.

11 ஒளிமுடிவேந்தன் றவீதுதனக்கொரு வுப்பரியும்
எழில்முடியாயு மிருந்தவளேயென் மரணத்திலே
விழிமடியாமல்வந் தன்பாய்க்கைதூக்கி
விடாதெனையாள்
வழுவனுகாவனை மாமரியேகற்பு மாணிக்கமே.

12 அண்டர்களண்டம் பகிரண்டகோணமு மம்புவியுங்
கொண்டுகொண்டெங்கு நிறைந்தோனையீன்ற
குலக்கொழுந்தே
தொண்டனுக்குன்ற னடைக்கலமேதுணை வேறுமில்லை
மண்டலீகர்க்கரசே மரியேகற்பு மாணிக்கமே.

13 தானுயிருந்து தனிச்சுயமாச்சமஸ் தும்படைத்த
கோனுதியேக பிதாவோடென்பாவக் குறும்பகலத்
தேனேமன்ருடும் பெரும்பாதகச்சிறி யேன்றனக்காய்
வானோர்புகழ்கனி மாமரியேகற்பு மாணிக்கமே.

14 ஆதியுமந்தமு மில்லாப்பரஞ்சுட ரண்ணல்முன்னே
தீதுகள்சிந்தை நிறைபாவிக்காகத் தினமிரந்து
சோதியில்முந்துஞ் சுடரேயென்பாவத் துகளொழித்தாள்
மாதவத்தங்க மாமரியேகற்பு மாணிக்கமே.

15 எங்குநிறைந்த பரஞ்சுடராகிய யேசுவின்முன்
சங்கையில்லாம லவர்பார்த்திருக்கவித் தாரணியிற்
சிங்கிவெறியிற் சினமிஞ்சிப் பாவங்கள் செய்துநொந்தேன்
மங்குலிற்சீர்தருவாய் மரியேகற்பு மாணிக்கமே.

16 அனைத்துயிரும் படைத்தோங்கியகாரண
வாண்டவர்க்குக்
கனத்தவிதனமுண் டாம்படிப்பாவங் கனைப்புரிந்தேன்
உனைத்துணையாய்நம்பி னேனுன்றிருச்சுதனே டிரந்தென்
மனத்துயர்தீர்த்தருள்வாய் மரியேகற்பு மாணிக்கமே.

17 உன்னதமான திருத்துவமெய்ப்பொரு ளுண்மையனைப்
பண்ணியபாவத்தி னுலுளத்திற்பதி யாதவஞ்சன்
என்னிருள்நீக்கி யிறைவனைச்சேர்ந்திட என்றனக்குன்
மன்னுமருள்புரிவாய் மரியேகற்பு மாணிக்கமே.

18 மின்னியசொர்ண மயமேனக்குன்றன் வேண்டுதலால்
உன்னதமான பரலோகவாச லொளியுறவே
கன்னியேஞானக் கண்ணுடியேமோக்ஷக் கதிர்விளக்கே
மன்னியமாதயைசெய் மரியேகற்பு மாணிக்கமே.

19 எப்போதும்வாக்குத் தத்தங்கள்தப்பாத பேரின்பரசந்
தப்பாமலுன்மகனே டெனக்காகத் தனித்திரந்து
ஒப்பாரில்லாத பரலோகவாசலுக் குத்தமியே
மைப்பாவநீக்கி யருள்மரியேகற்பு மாணிக்கமே.

20 விடியுற்றகாலத் துதையநட்சேத்திர வேதமின்னே
படியற்றபாவத்தி ருலிருள்மூடிப் பரந்தலைந்தேன்
முடிவுற்றமீன்முதல் முச்சுடர்பூண்ட முதல்வியேயுன்
வடிவுற்ற கண்கொடுபார் மரியேகற்பு மாணிக்கமே.

21 ஆத்துமமீதினிற் பாவவியாதி யடைந்தவர்க்கு
ஏத்தரிதான தயிலமதாக விருந்தவளே
காத்திடுங்காவ லுனைநம்பினேன் கைவிடாதெமையாள்
மாத்திலுயர்ந்தபொன்னே மரியேகற்பு மாணிக்கமே.

22 பாவிகள்தங்க ளடைக்கலமே பரிசுத்தபொன்னே
ஆவிபிரியு மரணத்தில்வந்தென் னருகிருந்து
பேயோடுபாவந் தனைநீக்கிமோக்ஷபே ரின்பமருள்
மாவிதஞானமுத்தே மரியேகற்பு மாணிக்கமே.

23 துக்கமிருந்து சலிப்பவர்க்கே துணையாயிருந்து
திக்கெனநற்கருணைக் கனியூட்டிடுந் தேற்றரவே
அக்கினிவன்னர கச்சிறைமீதமி ழாதெமையாள்
மைக்குழலார்க்கரசே மரியேகற்பு மாணிக்கமே.

24 கிறீஸ்துவர்தங்கள் சகாயமேவேதத்தின் கீதமின்னே
கருத்திலுனைமற வாதெனையாண்டுன்றன்
காவல்வைப்பாய்
தரித்திரருக்குப் புதையலேயுன்னருள் தஞ்சமம்மா
மரித்தவர்க்காறுதலே மரியேகற்பு மாணிக்கமே.

25 அன்னையேசம்மன சேனைகளுக்கர சானவள்நீ
இந்நிலமீதிலிறந்த பிதாக்களுக் கேந்தலுநீ
முன்னவர்தீர்க்கத் தரிசிபுகழ்தவ மூலியுநீ
மன்னுயிர்க்காதரவே மரியேகற்பு மாணிக்கமே.

26 சிந்தைமகிழு மப்போஸ்தலர்மார்கள் திருவரசே
முந்தியமோக்ஷநல் வேதத்தின்சாட்சிகள் முன்னரசே
எந்தன்மரண அவஸ்தையிலேசு மரியெனநீ
வந்தெனக்குச் சொல்லம்மா மரியேகற்பு மாணிக்கமே.

27 துதிக்கின்றவர்க்கரசே கன்னிமார்கள் சுடரரசே
கதிக்குமுயர் சகலர்ச்சியஷ்டர்கள் கற்பரசே
உதிக்கின்றசூரிய னம்புவியாவையு மோரணுவாய்
மதிக்கின்றபாத மருள்மரியேகற்பு மாணிக்கமே.

28 எப்போதுங்கன்னி பிறையோனியேசுவை யீன்றெடுத்த
அப்போதுங்கன்னி பெறுமுன்னங்கன்னி யனந்தகன்னி
தப்பாமலென்றனை யுன்றன்பதந்தன்னில் சாய்த்திருக்க
வைப்பாயனையே மாமரியேகற்பு மாணிக்கமே.

29 தேசிகரோதுஞ் செபத்தியானமேயொளிர் திவ்யபலி
பூசையில்வைத்து நிதம்வாசிக்குந்திருப் புத்தகத்தின்
வாசகமேவிண் ணொளியெவரு மதிக்கரிய
மாசணுகாதமுத்தே மரியேகற்பு மாணிக்கமே.

30 உன்னதமாகிய பன்னிருநல்வர முள்ளவளே
கன்னிமையாய்வளன் சூசைமணஞ்செய்த கற்பரசே
அன்னையேநீயவ ரோடுதவசிருந் தாச்சரியம்
மன்னியுரைக்கரிதே மரியேகற்பு மாணிக்கமே.

31 சந்திரனுன்பத தாமரைமேற்பரி வட்டசட்டை
சுந்தரச்சூரிய னுந்தனைச்சூடச் சுடர்முடியாய்
உன்திருச்சென்னியி லீராறுடுக்க ளொளிரவென்முன்
வந்தருள்செய்கனி மாமரியேகற்பு மாணிக்கமே.

32 முந்துதிரீத்துவத் தின்வலப்பாலென் முடிவிலுன்றன்
சுந்தரவானிட முன்கொலுவான சுடர்க்கொலுவும்
எந்தணைமீண்டன்பு பூண்டவியேசு விறைக்கொலுவும்
வந்துநீர்காட்டுமம்மா மரியேகற்பு மாணிக்கமே.

33 அங்கங்குபூதலத் துள்ளகிறீஸ்துவர் யாவருக்கும்
எங்கெங்குஞ்சென்றுநீ முன்னிற்பையேயிறை
யோன்பிலாதால்
சங்கைமிகுந்த திருச்சபைபூசிக்குந் தாபரமே
மங்களமங்கள மாமரியேகற்பு மாணிக்கமே.

34 சிந்தைமகிழுந் துறவோர்குருவுப தேசிகட்கும்
எந்தனுக்கும்புவி மீதிற்கிறீஸ்துவ ரியாவருக்குந்
தந்தருளாசீர் வாதஞ்சரணஞ் சரணமுன்றன்
மைந்தனை வேண்டியருள் மாமரியேகற்பு மாணிக்கமே.

35 என்னுளுநூற்றைம் பதுமணிமாலையை யிப்புவியில்
உன்னுபரணமென்றெண்ணிச் செபஞ்செய்யு முத்தமரைப்
பொன்னுசனக்கொலு மோக்கிஷவீட்டிற் புரந்தழைக்க
மன்ருடுவாய்மலரே மரியேகற்பு மாணிக்கமே.

36 திறமுற்றநற்றவத் தாலேதினம்பய பத்திவைத்து
அறுபத்துமூன்று மணிமாலைசெபிக்கு மன்பருக்கு
உறவுற்றமோக்ஷ முடிசூட்டியானந்த மூட்டிவைக்கும்
மறுவற்றமாமலரே மரியேகற்பு மாணிக்கமே.

37 பூமன்றயாபரன் புண்ணியன்பொற்புடை மைக்குகந்த
தேமன்மெய்ஞ்ஞான தியானசஞ்சூசை தினம்புகழும்
நாமன்றவீது மகியனின்கோத்திர நாயகியே
வாமவருள்புரிவாய் மரியேகற்பு மாணிக்கமே,

38 எதிர்கொடும்பாவ விடருணதீயி லெழும்புபல
கதிர்களுந்தாவிக் கரிநிறமாகிக் கலங்குமென்றன்
அதிகவிசார மனப்பீடையான தகற்றுமம்மா
மதுரமிகுந்தவளே மரியேகற்பு மாணிக்கமே.

39 அந்தரந்தெண்டிரை சூழ்புவியாவுமுண் டாக்குமுன்னே
மைந்தனின் சிந்தை மகிழ்வாயுதரத்தில் வந்துபிறந்
திந்தரையோரை யிரக்ஷிக்கவேசித்தத் தெண்ணினதால்
வந்தமைந்தாயமிர்தே மரியேகற்பு மாணிக்கமே.

40 அந்தமுமாதியு மில்லாப்பரப்பொரு ளாண்டவரைத்
தந்ததயாபரத் தாயேயெனக்குன் சரணபதந்
தந்தெனைமோக்ஷத் தலம்பெறவேரக்ஷித் தாளுமம்மா
மந்திரதியானமிகு மரியேகற்பு மாணிக்கமே.



## மாயூரம் விற்பன்னர்
## வேதநாயகர் எழுதிய நூல்கள்

நீதி நூல்

பிரதாப முதலியார் சரித்திரம்

சுகுணசுந்தரி

பெண்மதி மாலை

பெண் கல்வி

பெண் மானம்

சர்வ சமய சமரசக் கீர்த்தனை

சித்தாந்த சங்கிரகம்

சோபனப் பாடல்கள்

தனிப்பாடல்கள்

திருவருள் மாலை

திருவருள் அந்தாதி

தேவமாதா அந்தாதி

தேவதோத்திர மாலை

சத்திய வேதக் கீர்த்தனைகள்

பெரியநாயகி அம்மன் பதிகம்

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-76.